# கீதையின் உட்பொருள்

- பாரத யுத்த ஆரம்ப காலத்தில், கலங்கிய அர்ஜுனன்.
- நீ, ஆசிரியன், நான் உனக்குச் சிஷ்யன் எனக்கு ஹிதத்தை உபதேசம் செய்யவேண்டும் என்று சிரம் பற்றி வேண்டிக்கொள்ள, பகவான் அவனை வியாஜமாகக்கொண்டு அனைவருக்கும் ஹிதங்களை கீதையில் உபதேசிக்கிறான் என்னும் வரலாறு முதல் முதலில் அனுபவிக்கத்தக்கதாம்.
- அங்ஙனம் உபதேசம் செய்யப் பெற்றுள்ள ஹிதங்களுள், பக்தி ப்ரபத்தின் முக்கியங்களாம்.
- வேதன், மனிதன், பசு, பஷி, புல், பூண்டு, முதலிய வ்யஷ்டிப் பொருள்களைப் படைப்பதற்கு, நிலம், நீர், தீ, கால்(காற்று), விண்(ஆகாயம்) என்னும் ஐந்து பூதங்களும், கண் முதலிய ஞானேந்திரியங்கள், வாக்கு முதலிய கருமேந்திரியங்கள், மனம் ஆகிய பதினோரு இந்திரியங்களும் அஹங்காரமும், மஹத்தத்துவம் ஆக இவ்வெட்டுப் பொருள்களும் காரணமாய் இருப்பவையாம்.
- நாராயணனுடைய பூர்ணாவதாரமாகிய கண்ணனே சுவாமி, காரணன், குணக்கடல், ஆத்மா என்பது தெளிவாம்.
- எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மா எம்பெருமான் என்றால், எம்பெருமானுக்கு எல்லாப் பொருள்களும் சரீரம் என்பது எல்லாருக்கும் கூறாமலேயே நன்கு விளங்கும்.
- பகவத் கீதை என்பதற்கு கடவுளின் பாடல்கள் என்று பொருள்படும்.

- ராஜாஜியின் கைவிளக்கு
  பாலகங்காதர திலகரின் - தர்ம யோகம்
  மகாத்மா காந்தியின் - அநாஸக்தி யோகம்
  போன்றவை பகவத் கீதை உரைகளாகும்.
- உலகிலுள்ள பல மொழிகளில் பகவத் கீதை மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.
- ஆங்கிலத்தில் கீதையின் முதல் மொழிபெயர்ப்பு கிழக்கிந்தியக் கம்பெனியரால் செய்யப்பட்டது.
- அம்மொழிபெயர்ப்பு நூலுக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) எனும் ஆங்கில ஆட்சியாளர் முன்னுரை அளித்ததில்

> "இங்கிலாந்து ஒரு காலத்தில் இந்தியாவை இழக்க நேரிட்டாலும் இந்தியாவில் தோன்றிய பகவத்கீதையின் கோட்பாடுகளை இங்கிலாந்து நடைமுறைக்குக் கொண்டுவருமானால் இங்கிலாந்து என்றென்றும்

- கீதை என்னும் சொல் பாடப்பட்டது அல்லது உபதேசிக்கப்பட்டது என்ற பொருள் கொண்டது.
- கண்ணன் அர்ஜுனனுக்கு போர்க்களத்தில் உபதேசித்தது பகவத் கீதையாகும்.
- தமிழ் நாட்டில் பெரியார் தலைமையிலான திராவிட இயக்கத்தினர் பகவத் கீதையை கடுமையாக எதிர்த்தனர்.
- கீதை வருணாசிரம கருத்துகளுக்கு முட்டு கொடுக்கிறது என்று பகுத்தறிவாளர்கள் கூறி வருகின்றனர்.

- கீதையில் மொத்தம் 18 அத்தியாயங்கள் உள்ளன.
- கண்ணன் அர்ஜுனனுக்கு எடுத்துரைத்த வாதங்கள் ஐந்து.

    1. வேதாந்தம்,
    2. சுயதர்மம்,
    3. கர்மயோகம்,
    4. பக்தியோகம்,
    5. ஞானயோகம்.

## <u>வேதாந்தம்</u>

- இதில் கிருஷ்ணர் மாயை, கர்மா, பிம்பம், ஆசை, பிறவிச்சுழற்சி, மறுபிறவி, சொர்க்கம், தாந்திரீகம், தவம் ஆகியவை பற்றி எடுத்துரைக்கிறார்.

## <u>சுயதர்மம்</u>:

- " அர்ஜுனா உன்னுடைய சுயதர்மம் சத்திரியனுக்கு உகந்த தருமப்போராகும், இந்தப் போருக்காக பல ஆண்டுகள் காத்திருந்தாய், இப்போது நீ பின்வாங்குவது சரியன்று" என்று உபதேசிக்கிறார்.

## <u>கர்மயோகம்</u>:

- ஒவ்வொரு மனிதனும் கடமையைச் செய்வதில் விருப்போ, வெறுப்போ கொள்ளக் கூடாது. கடமையைக் கடமைக்காகவே

செய்ய வேண்டும். கடமையைச் செய்வதற்கு மட்டுமே உனக்கு அதிகாரம் உள்ளது என்று உபதேசிக்கிறார்.

## பக்தியோகம்:

பக்தியோகத்தின் பிரிவுகள் ஐந்து வகையாகும்

1. பற்றுடன் கூடிய பக்தி
2. பற்றில்லாமல் கூடிய பக்தி
3. சகுன உபாசன பக்தி
4. நிர்குண உபாசன பக்தி
5. ஞானயோக பக்தி

## ஞானயோகம்:

- ஞானமும் யோகமும் ஒன்று சேருவதே ஞானயோகம் ஆகும். தன்னைப் பற்றிய அறிவை அடையும் சாதனையாகும்.

-----***-----***-----